05.09.2024

S.C.No. 21/2024

PW. 3 Tr. திரு. சண்முககிருஷ்ணா

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரி தரப்பில்) :-</u>**

நானும், இந்த எதிரியும் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரிதான். இறந்து போன மனோஜ் ம், இந்த எதிரியும் சுமார் 3, 4 வருடங்களாக தான் நண்பர்களா என்றால் அது எனக்கு தெரியாது.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 28.08.2023 மாலை 8.00 மணியளவில் இறந்த போன மனோஜ்யும், ராஜகோபாலும் சத்தமாக பேசிக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். சத்தமாக பேசியது அவர்கள் இருவருக்குள்ளா அல்லது எதிரியுடனா என்றால் அவர்கள் இருவருக்குள் பேசிக் கொண்டார்கள். அவர்கள் சத்தமாக பேசினது எனக்கு எப்படி கேட்டது என்றால் பஜாருக்கு போய்விட்டு பைக்கில் வடக்கு ரதவீதி வழியாக வந்து கொண்டிருந்தபோது கேட்டது. இந்த ராஜகோபாலையும், மனோஜ்யும் எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான். அதனால் பைக்கை நிறுத்திவிட்டு ஏன் சத்தமாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என கேட்டேனா என்றால் இல்லை., நான் நிற்காமல் போய் விட்டேனா என்றால் ஆமாம் நிற்காமல் SSD பாத்திரக் கடைக்கு சென்றேன். எதிரி கத்தியை தலையை நோக்கி எவ்வளவு தூரத்திலிருந்து வீசினார் என்றால் கிட்ட

இருந்து வீசினார். எதிரி மனோஜ் நோக்கி குத்தவில்லை என்றாலும் வீசனார் என்றாலும் சரியல்ல. தலையை நோக்கி வீசினார். எதிரி, மனோஜ் தாக்கினார் என்று நானோ, மனோஜ் ன் அண்ணனோ மனோஜ் காப்பாற்ற முயற்சி செய்யவில்லை என்றால் நாங்கள் சத்தம் போட்டோம் எதிரி ஆவேசமா இருந்தார் அதனால் தடுக்க முடியவில்லை. எதிரி வீசின கத்தி கீழே விழுந்தவுடன் அதை எடுத்து மனோஜ் எதிரி மீது வெட்டியவுடன் எதிரி ஓடிவிட்டாரா என்றால் இல்லை அதன் பிறகு மீண்டும் ஆவேசம் அடைந்து ஸ்கூரு டிரைவரால் மனோஜ் ஐ குத்தினார். எவ்வளவு நேரம் அங்கே சண்டை நடந்தது என்றால் 5 நிமிடம் இருக்கும். நான் காயம் பட்ட மனோஜ் ஐ எனது இரு சக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு கூட்டிச் செல்லவில்லையா என்றால் என்னிடம் பைக் இல்லை. மனோஜ் சத்தியம் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற தகவல் எனக்கு எப்படி தெரியும் என்றால் போலீசார் விசாரணை செய்தபோது தெரியவந்தது. போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 11.00 மணி போல வந்தார்கள். போலீசார் 11.00 மணிக்கு அங்கு வந்தபோது யார் யாரெல்லாம் இருந்தோம் என்றால் நானும், அரவிந்த்ம் இருந்தோம், போலீசார் இருந்தார்கள். 11.00 மணிக்கு நான் எதற்காக அந்த இடத்தில் இருந்தேன் என்றால் சம்பவம் முடிந்தவுடன் நான் அதிர்ச்சியில் வீடு சென்றுவிட்டேன். அதன்பிறகு என்ன ஆனதோ என தெரிந்து கொள்வதற்காக அங்கு வந்தேன். நான் வரும்போது அரவிந்திற்கும் தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. அரவிந்த் ஏற்கனவே அங்கு இருந்தார். அரவிந்திற்கும் மனோஜ்க்கு மருத்துவமனையில் என்ன ஆனது என்பது அது வரையில் தெரியாது என்றால் அது எனக்கு தெரியாது, தெரிந்திருக்கலாம். அரவிந்த்

மனோஜிற்கு என்ன ஆனது என்று எனக்கு சொல்லவில்லை என்றால் சரிதான். அப்போது 11.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு போகும்போது அரவிந்துடன் போலீசும் நின்று கொண்டிருந்தார்களா என்றால் ஆமாம். மனோஜ் இறந்து விட்டான் என்ற தகவல் தெரிந்தபிறகு நானும், அரவிந்தும் சத்தியம் மருத்துவமனைக்கு போனோம் என்றால் சரியல்ல. போகவில்லை. போலீஸ் சம்பவ இடத்தை விட்டு போகும் வரையில் நாங்கள் இருவரும் அங்கு தான் இருந்தோமா என்றால் ஆமாம். போலீஸ் சம்பவ இடத்தை விட்டு சென்ற பிறகு நாங்கள் இருவரும் வீட்டிற்கு போய்விட்டோமா என்றால் இல்லை காவல் நிலையத்திற்கு கூப்பிட்டார்கள். நாங்கள் அங்கே சென்றோம். எவ்வளவு நேரம் காவல் நிலையத்தில் இருந்தோம் என்றால் நாங்கள் அங்கு சென்ற போது ஆய்வாளர் வெளியே சென்றிருந்தார் காலை வரையில் வரவில்லை எனது அம்மா வழக்கறிஞர் ஒருவரை என்ன ஆனது என தெரிந்து கொள்வதற்காக காவல் நிலையம் வந்தார். இரவு முழுவதும் காவல் நிலையத்தில் இருந்த என்னையும், அரவிந்தையும் 29.08.2023 காலை எங்களது பெற்றோர்கள் வழக்கறிஞர் உதவியுடன் எழுதிக் கொடுத்துவிட்டு கூட்டிச் சென்றார்கள் என்றால் எழுதிக் கொடுக்கவில்லை என்ன ஆனது என கேட்டுக் கொண்டு ஆய்வாளர் அனுப்பி விட்டார். அதன் பிறகு நான் மனோஜின் பிரேத பரிசோதனை நடந்த ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கோ பிரேத அடக்கத்திற்கோ போகவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவத்தை பற்றி சம்பவம் நடந்தவுடன் எனது நண்பர்கள் யாருக்காவது தகவல் சொன்னேனா என்றால் இல்லை. சம்பவத்தை செல்போனில் படம் பிடித்தேனா என்றால் இல்லை. எனக்கு சொந்தமாக செல்போன் உள்ளதா

என்றால் உள்ளது. இந்த சம்பவம் நடந்த சமயத்தில் என் செல்போன் என்னிடம் தான் இருந்தது என்றால் ஆமாம், இருந்தது. அந்தசெல்போனில் எத்தனை சிம் உள்ளது என்றால் ஒரு சிம்தான் உள்ளது. அதன் எண். 7604982306. அதன்பிறகு உடல் நல்லடக்கம் முடிந்த பிறகு காவல் நிலையத்திற்கோ, சம்பவ நடந்த இடத்திற்கோ நான் போகவில்லையா என்றால் போகவில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் இந்த எதிரி எந்த குற்ற செயலும் புரியவில்லை என்றாலும் இறந்துபோன மனோஜ்ற்கும் அவரது சகோதரருக்கும் இருந்த முன்விரோதத்தின் காரணமாக நடைபெற்ற கொலை சம்பவத்தின் மனோஜ்ஜின் சகோதரர் ராஜகோபாலை காப்பற்றுவதற்கு வேண்டி, நான் இந்த நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.